# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.282/2024 | Date | : 20.09.2024 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : சேகர் | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.09.2024.
(எதிரி ஆஜர்.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் மகுடஞ்சாவடி எர்ணாபுரம் நம்பியாம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 04 மாதத்திற்கு முன்பு இரவு சுமார் 11.00 மணியளவில் எனக்கு எனது உறவினர் கார்த்தி என்பவர் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு காரில் எனது மகன் சுபாஷ் மற்றும் சிவலிங்கம் ஆகியோருடன் கார்த்தி என்பவர் ஓட்டிக்கொண்டு சேலம் டு கோவை தேசிய நெடுஞ்சாலையில் அன்றைய தினம் இரவு பத்தே முக்கால் மணிக்கு வைகுண்டத்திற்கு சுமார் அரை கிலோ மீட்டருக்கு முன்னால் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்ற லாரியின் மீது ஆஜர் எதிரி கார்த்திக் வேகமாக சென்று லாரியின் பின்புறம் மோதியதாகவும் அதில் எனது மகன் சுபாஷ் குமாருக்கு நெஞ்சிலும் பின் தலையிலும் அடிபட்டதால் சம்பவ இடத்திலேயே அவர் இறந்து விட்டதாகவும் அவரை மகுடஞ்சாவடி மருத்துவமனையில் வைத்திருப்பதாகவும் கூறினார்.

2) நான் உடனடியாக மகுடஞ்சாவடி மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்த்தேன். மருத்துவர்கள் எனது மகன் இறந்து விட்டதாக சொன்னார்கள். மறுநாள் காலையில் இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி கார்த்தியும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று இரவு முழுவதும் கனமழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். எனது மகனின் இறப்பிற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். அதில் கையொப்பம் போடுமாறு போலீசார் கேட்டுக் கொண்டதற்காக நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். முன்னால் சென்ற லாரியின் ஓட்டுனரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Sekar

Judicial Magistrate No.1,

Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.282/2024 | Date | : 20.09.2024 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **சிவலிங்கம்** | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.09.2024.
<u>(எதிரி ஆஜர்.எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை :**</u>

1) நான் மகுடஞ்சாவடி எர்ணாபுரம் நம்பியாம்பட்டியில் குடியிருந்து தறி தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.05.2024 ஆம் தேதி, இரவு சுமார் 10.15 மணியளவில் ஸ்கார்பியோ காரில் காரை எதிரி கார்த்திக் ஓட்டிக்கொண்டும் அவருக்கு அருகில் சுபாஷ் அமர்ந்தும் நான் பின்னிருக்கையில் அமர்ந்தும் சேலம் டு கோவை தேசிய நெடுஞ்சாலையில் காளிப்பட்டி பிரிவு மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது, முன்னால் சென்ற லாரியை பார்த்து அட போச்சுடா என்று சுபாஷ் கத்தினார். அவர் கத்திக் கொண்டிருக்கும்போது லாரியின் பின்னால் எங்கள் கார் மோதி விட்டது.

2) மோதியவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டது. நான் சேலத்தில் உள்ள ப்ரீத்தம் என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது கண் விழித்தேன். எனக்கு தலை,கை மற்றும் மூக்கு ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது.

சுபாஷ் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

1) விபத்து நடந்த இடம் மேம்பாலத்தில் இருந்து கீழே வரும் போது ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் கன மழை பெய்து கொண்டிருந்ததால் கார் மெதுவாக ஓட்டிவரப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேம்பாலத்திலிருந்து இறங்கிய உடனே புதிய மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அந்த இடத்தில் பேரிக்காடு வைக்கப்பட்டு இருந்தது என்றும், வாகனங்கள் இடது புறமாக உள்ள சர்வீஸ் சாலையில் திருப்பி விடப்பட்டிருந்தது என்றும் சொன்னால் சரிதான்.

2) முன்னால் சென்ற லாரி திடீரென்று பிரேக் பிடித்து நின்றதால் பின்னால் சென்ற எங்கள் கார் மோதி விட்டது என்றால் லாரி பிரேக் பிடித்த விவரம் எனக்கு தெரியாது. நான் காரின் பின் சீட்டில் அமர்ந்து சென்றதால் முன்னால் சத்தம் கேட்டு தான் எனக்கு தெரியும் என்றும் கார் எவ்வாறு சென்றது என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். எங்களுக்கு முன்னால் சென்ற லாரியின் ஓட்டுநர் அஜாக்கிரதையாக லாரியை திடீரென்று நிறுத்தியது தான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் ஆமாம்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sivalingam